# அமைச்சரவைக் கூட்டத் தீர்மானம்... முதல் பக்கத் தொடர்ச்சி

தமிழ்நாடு நீரேற்று புனல் மின் திட்டங்கள் கொள்கையின் வாயிலாக, பொதுத்துறை மற்றும் தனியார் நிறுவனங்கள் நீரேற்று புனல் மின் திட்டங்களை செயல்படுத்த ஊக்குவிக்கப்படுகிறது. மேலும், தமிழ்நாட்டில் வரும் 2030ஆம் ஆண்டில் 20,000 மெகா வாட் சூரிய மின்உற்பத்தி நிலையம் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட சூரிய மின் நிலையங்களில் உற்பத்தியாக உள்ள அதிகப்படியான பசுமை எரிசக்தியை சமப்படுத்தி மின் கட்டமைப்பில் மின்சாரமாக மாற்றி பயன்படுத்த நீரேற்று புனல் மின் திட்டங்கள் கொள்கை வழிவகுக்கும்.

**சிறிய புனல் மின் திட்ட கொள்கை 2024**

சிறிய புனல் மின் திட்டங்கள் என்பது 100 கி.வா. முதல் 10 மெகா வாட் வரை மின் உற்பத்தி திறன் கொண்ட சிறிய அளவிலான நீர் மின் நிலையங்கள் ஆகும். இக்கொள்கையின் வாயிலாக, தனியார் நிறுவனங்கள் சுற்றுச்சூழலுக்கு அதிகம் பாதிப்பில்லாமல் மின்சாரத்தை உற்பத்தி செய்து சொந்த பயன்பாட்டிற்கு பயன்படுத்த ஊக்குவிக்கப்படும்.

சிறிய நீர்மின் திட்டங்கள் மூலம் கரியமில வாயு வெளியேற்றத்தை குறைத்து, புதுப்பிக்கத்தக்க மற்றும் மாசற்ற தூய்மையான மின்சார வளத்தை உருவாக்க இயலும். நிலையான எரிசக்தி இருப்பை உறுதி செய்ய குறைந்துவரும் மரபுசார் எரிபொருளான நிலக்கரி, எரிவாயு போன்ற இருப்புகளை சார்ந்திருப்பதை தவிர்க்கலாம். சூரிய மின்சக்தி உற்பத்தியாளர்களுக்கு புனல் திட்டங்களால் கிடைக்கும் நிலையான மின் உற்பத்தி, மின் கட்டமைப்பின் திறனை சமன்படுத்த பயன்படும். புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் வேலை வாய்ப்பு மற்றும் திறன் மேம்பாட்டை உருவாக்க முடியும். சிறு புனல் திட்டங்களால் ஆராய்ச்சி மேம்பாடு மற்றும் புதிய தொழில்நுட்பங்களை புகுத்த முடியும். இதன்மூலம் உற்பத்தி செய்யப்படும் மொத்த மின்சாரத்தில் 10 சதவீதம் தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்திற்கு இலவசமாக வழங்கப்படும்.

**காற்றாலை மின் உற்பத்தி நிலையங்களுக்கான புதுப்பித்த மற்றும் ஆயுள் நீட்டிப்பு கொள்கை - 2024**

தமிழ்நாட்டில் 1984ஆம் ஆண்டு முதல் காற்றாலைகள் நிறுவப்பட்டு மின் உற்பத்தியில் முக்கிய பங்கு வகிக்கிறது. மேற்கண்ட காற்றாலைகள் குறைந்த திறன் கொண்ட பழைய காற்றாலைகள் ஆகும். இக்காற்றாலைகளின் மின் உற்பத்தி திறனை அதிகரிக்க காற்றாலைகளை புனரமைத்தல் (Wind Repowering), புதுப்பித்தல் (Wind refurbishment) மற்றும் ஆயுள் நீட்டிப்பு (Wind Life Extension) ஆகிய மூன்று வழிகள் அனுமதிக்கப்படுகிறது. தமிழ்நாட்டின் காற்றாலை மின் உற்பத்தி மேலும் 25% அதிகரிக்க இக்கொள்கை வழிவகுக்கும்.

மேற்கண்ட மூன்று கொள்கைகள் வாயிலாக, நமது மாநிலத்தின் மாசற்ற, பசுமை எரிசக்தி அதிகரிக்கப்படுவதுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிர்ணயம் செய்துள்ள 2030ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் மின் கட்டமைப்பில் 50% பசுமை மின் உற்பத்தி என்ற உயரிய இலக்கினை அடைவதற்கும் இக்கொள்கைகள் வழிவகை செய்யும்.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

# தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்!

### பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு



கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம் வருகிற 16-08- 2024 வெள்ளிக்கிழமை காலை 10.30 மணி அளவில், சென்னை, கலைஞர் அரங்கில் நடைபெறும்.

அதுபோது மாவட்டக் கழகச் செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள் : முப்பெரும் விழா**

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018.
நாள் : 12 -08- 2024.

**துரைமுருகன்,**
பொதுச்செயலாளர்
தி.மு.க.

## இந்தியாவின் கல்வி ஆற்றல் மையமாக

# தமிழ்நாடு தொடர்ந்து மின்னுகிறது!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, ஆக. 14 - "இந்தியாவின் கல்வி ஆற்றல் மையமாக தமிழ்நாடு தொடர்ந்து மின்னுகிறது" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

இந்தியாவின் கல்வி ஆற்றல் மையமாக தமிழ்நாடு தொடர்ந்து மின்னுகிறது! NIRF Rankings 2024இல் அதிக எண்ணிக்கையிலான உயர்கல்வி நிறுவனங்களுடன், நமது மாநிலம் மற்றவர்களை விட மிகவும் முன்னோக்கி நிற்பதுடன், தரமான கல்விக்கான அளவுகோலை நிர்ணயித்துள்ளது.

நமது நாட்டின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் முன்னணியில் இருக்கும் திராவிட மாடலுக்கு இது ஒரு பெருமையான தருணம்!

நான் முதல்வன், புதுமைப் பெண், தமிழ்ப் புதல்வன் போன்ற முத்தாய்ப் பான திட்டங்களின் மூலம் நமது மாணவர்கள் உயர் கல்வியில் மென்மேலும் புதிய உச்சங்களைத் தொடுவார்கள்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

# கலைஞர் நூற்றாண்டு - நாணயம் வெளியீட்டு விழாவில் திரளாகப் பங்கேற்போம்!

### சென்னை கிழக்கு மாவட்டக் கழக கூட்டத்தில் தீர்மானம் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை, ஆக.14-

சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக்கழகச் செயலாளர்கள், வட்ட கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம், நேற்று முன்தினம் (12.08.2024 திங்கள்கிழமை), சென்னை, ஓட்டேரி, ஸ்டாரன்ஸ் சாலையில் அமைந்துள்ள எம்.கே.டி. மஹாலில், அவைத்தலைவர் கோ.ஏகப்பன் தலைமையில் நடைபெற்றது, சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும், இந்து சமய அறநிலையத் துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழும அமைச்சருமான பி.கே. சேகர்பாபு சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

ஒட்டு மொத்த தமிழினத்தின் பாதுகாவலராக, நவீன தமிழ்நாட்டை தட்டித் தட்டி செதுக்கிய சிற்பியாக, தமிழை திறம்பட கையாண்ட படைப்பாளராக, செம்மொழி தகுதியைப் பெற்றுத் தந்த தமிழினப் போராளியாக, 80 ஆண்டுகாலப் பொது வாழ்வின் ஒவ்வொரு நாளையும் ஒவ்வொரு பொழுதையும் தமிழ் தமிழர் தமிழ்நாடு மேன்மைக்காக அர்ப்பணித்து அயராது உழைத்த ஓய்வறியாத சூரியனாம் நம் உயிர் நிகர்த் தலைவர் தொலைநோக்கு பார்வையுடன் உருவாக்கிய திட்டங்களும், நிலை நிறுத்திய திராவிட கொள்கைகளும் தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல இந்திய ஒன்றியம் முழுமைக்கும் வழிகாட்டும் மனிதநேய தத்துவமாகத் திகழும் நம் பெருமைமிகுத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆறாவது நினைவு நாளில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற அமைதிப் பேரணியில் கலந்துகொண்டு முத்தமிழறிஞருக்கு வீர வணக்கம் செலுத்திய சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகளுக்கும், செயல் வீரர்களுக்கும், கழக முன்னோடிகளுக்கும் இக்கூட்டம் மனமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றியது.

அருந்ததியின மக்கள் பொருளாதார நிலையில் அடித்தளத்தில் மிகவும் பின்தங்கி இருப்பதால் அவர்தம் முன்னேற்றத்திற்கு சிறப்புச் சலுகைகள் அவசியமெனக் கருதி ஆதிதிராவிடர்களுக்கு வழங்கப்பட்டுவரும் 18% இட ஒதுக்கீட்டில் 3% அருந்ததியர்களுக்கு உள் இட ஒதுக்கீடாக வழங்க வேண்டும் என 29.4.2009 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அறிவுரைப்படி அப்பொழுது உள்ளாட்சித் துறை அமைச்சராகத் திகழ்ந்த இன்றைய முதலமைச்சர் அவர்கள் சட்டப் பேரவையில் மசோதாவை தாக்கல் செய்து நிறைவேற்றிய திட்டத்தால் அருந்ததியின மக்கள் அடைந்த பலன்களை கண்டு மனம் பொறுக்காத வீணர்கள் இச்சட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என உச்சநீதிமன்றத்தில் வழக்கு போட்டதை எதிர்த்து நம் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னெடுத்த பல்வேறு சட்டப்போராட்டங்களுக்குப் பிறகு இப்பொழுது உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி தலைமையிலான அமர்வு இந்த உள் ஒதுக்கீடு செல்லும் என அறிவித்ததை இக்கூட்டம் மனம் மகிழ வரவேற்று வரலாற்று சிறப்பு வாய்ந்த தீர்ப்பு வழங்கிய உச்சநீதிமன்றநீதிபதிகளுக்கு இக்கூட்டம் நன்றியையும் இத்திட்டம் செவ்வண நிறைவேற காரணமாக இருந்த கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை பாராட்டியும், வணங்கியும் இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

**யானை கவுனி மேம்பாலம்!**

சென்னை கிழக்கு மாவட்டம், வால்டாக்ஸ் சாலை மற்றும் ராஜா முத்தையா சாலை இணைக்கும் நயினார் மேம்பாலம் என்கின்ற யானைக்கவுணி மேம்பாலம் கடந்த ஆட்சியாளர்களால் கிடப்பில் போடப்பட்டிருந்த நிலையில் 2016-ஆம் ஆண்டு நம் கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி துறைமுகம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினராக இருந்த அமைச்சர் சேகர்பாபு அவர்களும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த தயாநிதிமாறன் அவர்களும் தொடர்ந்து இரு அவைகளிலும் குரல் எழுப்பியும், அப்பணிகளை தொடர்ந்து ஆய்வு செய்தும் குறிப்பாக கொரோனா தொற்று காலத்தில் 5 க்கும் மேற்பட்ட முறை இப்பணிகளை மேற்பார்வையிட்டும் தொடர்ந்து தென்னக ரெயில்வே மேலாளரை சந்தித்து முறையிட்டனர்.

2021-ல் கழக ஆட்சி அமைந்தவுடன் ஒன்றிய அரசுக்கு கொடுத்த தொடர் அழுத்தத்தின் விளைவாக மார்ச் 15 அன்று இப்பாலம் ஒரு வழிப்பாதையாக திறந்தும், அதனைத்தொடர்ந்து நேற்று (12.08.2024) அப்பாலத்தின் இரு வழிப்பாதைகளும் மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்த கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இக்கூட்டம் மனமார்ந்த நன்றியை தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றியது.

தமிழ்நாட்டின் 80 ஆண்டுகால அரசியல் வரலாற்று பெட்டகமாகவும், அரசியல் நுண்ணுணர்வை பாமரருக்கும் கடத்தும் பரப்புரை ஆயுதமாகவும், தன்னை காலத்துக்கேற்றவாறு தகவமைத்துக் கொண்டு புதுப் பொலிவுடன் புதிய பக்கங்களுடன் 83 ஆம் ஆண்டில் அடி எடுத்து வைக்கும் முத்தமிழறிஞரின் மூத்த பிள்ளை முரசொலியைப் படிப்போம், அதிக அளவில் பகிர்வோம், பரப்புவோம் என உறுதியேற்று இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது

**கலைஞர் உருவம் பொறித்த 100 ரூபாய் நாணயம் வெளியீடு!**

தமிழ்-தமிழர்- தமிழ்நாடு மேன்மைப்படுத்த தன் வாழ்நாள் முழுவதும் உழைத்திட்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவருடைய நூற்றாண்டு நிறைவையொட்டி அவரது உருவம் பொறிக்கப்பட்ட நூறு ரூபாய் நாணயத்தை 18.08.2024 ஞாயிற்றுக்கிழமை மாலை கலைவாணர் அரங்கத்தில் கழகத் தலைவர்தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் ஒன்றிய பாதுகாப்புத்துறை அமைச்சர் தராஜ்நாத் சிங் வெளியிடும் விழாவில் பெருந்திரளாக கலந்து கொள்ள முடிவெடுத்து இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

## அதானி முறைகேடுகள்:

# விசாரணையை விரைந்து முடிக்க 'செபி'க்கு உத்தரவிட வேண்டும்!

### உச்சநீதிமன்றத்தில் புதிய மனுத் தாக்கல்!

புதுடெல்லி, ஆக.14-

அதானி முறைகேடு தொடர்பாக 'செபி' விரைவாக விசாரணையை முடிக்க உத்தரவிடக் கோரி உச்சநீதிமன்றத்தில் புதிய மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதானி குழுமத்தின் பங்குச்சந்தை முறைகேடுகள் தொடர்பாக, கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, அமெரிக்காவைச் சேர்ந்த முதலீட்டு ஆய்வு நிறுவனமான ஹின்டன் பர்க் வெளியிட்ட அறிக்கை, உலகம் முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இதையடுத்து, அதானி குழும நிறுவனங்கள், பெரும் இழப்பைச் சந்தித்தன. உச்சநீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டதையடுத்து, பங்குச்சந்தையில் அதானி குழுமத்தின் முறைகேடு குறித்து விசாரணை நடத்த 'செபி'க்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. அதன்பின்னர், விசாரணை நடத்திய 'செபி', கடந்த மாதம் ஹிண்டன் பர்க் அமைப்புக்கு நோட்டீஸ் அனுப்பியது.

இந்நிலையில், இந்தியா குறித்த மற்றொரு அறிக்கையை வெளியிட உள்ளதாக ஹிண்டன் பர்க் நிறுவனம் அறிவித்தது பரபரப்பை ஏற்படுத்தியது. இந்தச்சூழலில் கடந்த 10ஆம் தேதி ஹிண்டன்பர்க் வெளியிட்ட அறிக்கையில், அதானி நிறுவனத்தின் வெளிநாட்டு முதலீடுகளில் செபி அமைப்பின் தலைவர் மாதபி புச்க்கும், அவரது கணவருக்கும் பங்குகள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டது. இதற்கான அனைத்து ஆதாரங்களும் தங்களிடம் இருப்பதாகவும், முறையான ஆய்வுக்கு பின்னரே இந்த தகவலை வெளியிட்டுள்ளதாகவும் ஹிண்டர்பர்க் தெரிவித்தது.

இந்த விவகாரம் பூதாகரமாக சென்று கொண்டிருக்கும் நிலையில், அதானி முறைகேடு தொடர்பாக 'செபி' விரைவாக விசாரணையை முடிக்க உத்தரவிடக் கோரி உச்சநீதிமன்றத்தில் புதிய மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதில், உச்சநீதிமன்றம் உத்தரவிட்டு 18 மாதங்களாகியும், அதானி குழுமத்தின் பங்குச்சந்தை முறைகேடு குறித்து, செபி இன்னும் விசாரணையை முடிக்கவில்லை என்றும், நிலுவையில் உள்ள விசாரணையை செபி விரைந்து முடிக்க உத்தரவிட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## விடுதலை திருநாள் விழா!

# தி.மு.க. தலைமைக் கழகம் - அண்ணா அறிவாலயத்தில் 15.8.2024 அன்று காலை சரியாக 8 மணிக்கு தேசியக் கொடி ஏற்றப்படுகிறது!

வருகிற 15.8.2024 வியாழக்கிழமை இந்திய நாட்டின் விடுதலை திருநாளினையொட்டி, கடந்த ஆண்டுகளைப் போலவே, இந்த ஆண்டும் தி.மு.க. தலைமைக் கழகமான அண்ணா அறிவாலயத்தில் காலை சரியாக 8.00 மணிக்கு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, தேசியக் கொடி ஏற்றி வைக்கிறார்.

சென்னை வடக்கு - சென்னை வடகிழக்கு - சென்னை கிழக்கு - சென்னை மேற்கு - சென்னை தென்மேற்கு - சென்னை தெற்கு ஆகிய மாவட்டக் கழகங்களைச் சார்ந்த நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நாள் : 13 -08- 2024.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் சென்னை பல்கலைக்கழகத்தில் காவல்துறை சார்பில் நடைபெற்ற "போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு" நிகழ்ச்சியில், கல்லூரி மாணவ, மாணவியர்கள் போதைப்பொருட்கள் ஒழிப்பு குறித்த உறுதிமொழியை ஏற்றுக்கொண்டனர். மதுரையில் இந்நிகழ்வில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், மதுரை மாவட்ட ஆட்சியர் சங்கீதா, மதுரை மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த், வடக்கு சட்டமன்ற உறுப்பினர் கோ.தளபதி, மாநகராட்சி ஆணையாளர் தினேஷ்குமார்,மாவட்ட வருவாய் அலுவலர் சக்திவேல், வருவாய் கோட்டாட்சியர் ஷாலினி, மாநகர காவல் ஆணையர் லோகநாதன், உதவி ஆட்சியர் பயிற்சி வைஷ்ணவி பால், புதூர் பூமிநாதன்,மாவட்ட ஊராட்சி தலைவர் சூரியகலா கலாநிதி, மண்டலத்தலைவர் சரவண புவனேசுவரி மற்றும் அரசு உயர் அலுவலர்கள், மக்கள் பிரதிநிதிகள் பலர் காணொளிக் காட்சி வாயிலாக பங்கேற்றனர்.




நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க அலுவலகத்தில் தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் துணை ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் தலைமையில் நடைபெற்றது. உடன் கழக தீர்மானக் குழு உறுப்பினர் சுப.சீதாராமன்,மாநில மகளிர் தொண்டரணி துணை செயலாளர் விஜிலாசத்யானந்த், மாவட்ட துணை செயலாளர் கிரிஜாகுமார், வெங்கடேசன் உட்பட கழகத்தினர் பலர் உள்ளனர்.